## R 5785 (page 309)

# "தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்"

## "GOD MANIFEST IN THE FLESH"

*தேவ பக்திக்குரிய இரகசியமானது மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார்." (1 தீமோத்தேயு 3:16)*

ஜீவனின் ஊற்று அல்லது ஜீவனின் ஆரம்பமாகிய தேவன் தம்மை பல்வேறு சிருஷ்டிகளில் வெளிப்படுத்த விரும்புகிறார். அனைத்து அறிவுள்ள ஜீவிகளும் அவருடைய பிள்ளைகளாக அங்கீகரிக்கப்பட்டு அவருடைய ரூபத்தின்படியே இருந்தனர். தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாயிருக்கிற லோகாஸ் தெய்வீக ரூபத்தின்படி இருந்தார். அவர் ஆவியின் ஜீவியாக மட்டுமல்ல (தேவன் ஆவியாயிருக்கிறார்) அதற்கும் மேலாக அவரது சிருஷ்டிகராகிய பிதாவானவரின் குணலட்சணங்களுக்கு ஒத்திருந்தார்.

மேலும், தேவதூதர்கள், கேரூபீன்கள், சேராபீன்கள் போன்ற பல்வேறு வகைப்பட்ட சிருஷ்டிகளை சிருஷ்டிப்பதில் லோகாஸ் முகவர் ஆன போது, அவர்களனைவரும் பிதாவானவரின் சாயலில் சிருஷ்டிக்கப்பட்டார்கள். பல்வேறு சிருஷ்டிகளை பார்த்ததால் தேவபுத்திராகிய தூதர்கள் ஏகமாய் கெம்பீரித்தார்கள். இன்னும் வேறு வகையான சிருஷ்டிகளை, மனுக்குலத்தை சிருஷ்டிக்க நேரம் வந்தபோது, தேவன் லோகாஸ் மூலமாக தமது சாயலின்படியும் ரூபத்தின்படியும் சிருஷ்டித்தார். மேலும் மனித சிருஷ்டிப்பை அவர் நல்லது என்று கண்டதாக அறிவித்தார்.

முதல் மனிதனின் சிருஷ்டிப்பைக் குறித்து எட்டாம் சங்கீதம் விளக்குகிறதாவது: "நீர் அவனை தேவ தூதரிலும் சற்று சிறிய வனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் முடி சூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின் மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டு மிருகங்களையும், ஆகாயத்து பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடலில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தினீர்." இவைகளெல்லாவற்றிற்கும் ஆதாம் தலைவனாக, ராஜாவாக இருந்தான். தூதர்கள் பிரதிநிதித்துவப்படுத்தாதை மனிதன் பிரதிநிதித்துவப்படுத்தினான். தூதர்கள் எதற்கும் மேலாக வைக்கப்படவில்லை. தேவனே அனைத்திற்கும் ராஜாவாக இருக்கிறார். ஆதாமும் லோகாஸும் ஏதோ ஒன்றின்மேல், ஏதோ ஒருவகையில் மேலாக வைக்கப்பட்டார்கள்.

தேவன் மனிதனை உண்டாக்கியபோது, தம்மைப்போலவே ஆளுகை உடையவனாக சிருஷ்டித்தார். தூதர்களை தேவன் சிருஷ்டித்தபோது, அவர்களை பல்வேறு வகைகளில் வெளிப்படுத்தினார். (கேருபீன்கள், சேராபீன்கள் மற்றும் தாழ்ந்த நிலையிலுள்ள தூதர்கள்) மனிதனை உண்டாக்கியபோது, அவன் தேவ சாயலில் உண்டாக்கப்பட்டான். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். ஆனால் தற்போது விழுந்துபோன மாம்சத்தில் தேவன் வெளிப்பட்டார் என்று நாம் கூற முடியாது. தேவனுடைய உண்மையான சாயல் பாவத்தில் அழிக்கப்பட்டுவிட்டது. பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையால் தேவனுடைய சாயலின் சுவடு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அழிந்துவிட்டது என்று வேதவாக்கியங்கள் தெளிவாக காண்பிக்கின்றன.

ஆதாம் தேவனுடைய மகன் என்று அழைக்கப்பட்டார். ஏனெனில் அவர் தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் இருந்தார்; ஆனால் அவர் ஒரு பாவியான பொழுது இந்த உறவை அவர் இழந்துவிட்டார். யூதர்களில் யாரும் தேவனுடைய பிள்ளையாக இருக்கவில்லை. ஆபிரகாம் தேவனுடைய நண்பன் என்று அழைக்கப்பட்டார். தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தீர்க்கதரிசிகள் மற்றும் இஸ்ரயேலில் இருந்த மற்றவர்களையும் அங்கீகரித்து, பெரிய ஆசீர்வாதம் அவர்களுடையது என்று குறிப்பிட்டிருந்தாலும், அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக கருதப்படமுடியவில்லை. தேவன் ஆபிரகாமுடன் பேசும்போது, எனது நண்பனே, நான் உன்னுடன் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன். "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று கூறினார்.

ஆனால் ஆபிரகாமின் மகா மெய்யான சந்ததி வரும்வரை எல்லாம் காத்திருக்க வேண்டும். மெய்யான ஆபிரகாமின் சந்ததியாகிய, மீட்பராகிய இவர் எப்படி வருவார் என்பதற்கு நமக்கு பதிவுகள் இருக்கிறது. லோகாஸ் எப்படி மாம்சமாக்கப்பட்டு, மனுஷருக்குள்ளே வாசம் பண்ணினார் என்று விவாதித்த பிறகு, பரிசுத்த யோவான், இயேசு பிதாவானவரின் ஒரே பேறான குமாரன் என்கிற மகிமையையும் முழு கிருபையையும் முழு சத்தியத்தையும் பெற்றிருந்தார் என்று அறிவிக்கிறார். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார் என்பதில் இதுவே எல்லாவற்றிற்கும் மேலான வழியாக இருந்தது.

தாழ்ந்த விலங்கினங்கள் ஆதாமை பார்த்தபோது, அவைகளுக்கான கிடைக்கத்தக்க சிறந்த தேவனுடைய பிரதிநிதியை கண்டன. இதற்கும் மேலாக தேவனுடைய ரூபத்தின்படி மாம்சத்திலே உண்டாக்கப்படமுடியாது. தமது குமாரனை உலகிற்கு அனுப்ப தேவனுக்கு நேரம் வந்தபோது, மனிதனின் மீட்பராக இருக்கக்கூடிய பெரிய சலுகையை அவருக்கு முன் வைத்தார். அவர் மாம்சமாக்கப்பட்டபோது, அவரை பார்த்தவர்கள்

பிதாவானவரின் ஒரே பேறானவருடைய மகிமையைக் கண்டார்கள். யாராவது அவரை பார்த்தபோது, பார்க்க சாத்தியப்படுவதில் அதிக பட்ச அளவுக்கு பிதாவானவரை பார்த்தார்கள்.

தேவன் மோசேயிடம் கூறியதாவது: "எந்த மனிதனும் என் முகத்தை பார்த்து உயிரோடிருக்க முடியாது." தர்சு பட்டணத்தானாகிய சவுல் மகிமையடைந்த இயேசுவின் ஒரு கண சிறு ஒளிக்கீற்றை மட்டுமே பார்த்தான். முழு மகிமையையும் பார்த்திருந்தால் சவுல் உயிரோடிருந்திருக்க மாட்டான். இயேசு பிதாவானவரின் தற்சொரூபமாயிருந்தார். தேவனைப் பார்த்து யாரும் உயிரோடு இருக்க முடியாததைப் போல மகிமையடைந்த இயேசுவைப் பார்த்தும் உயிரோடிருக்க முடியாது.

## தேவன் பிரபுக்களில் வெளிப்பட்டார்

மனிதருக்குள்ளே கிறிஸ்துவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது, பூமிக்குரிய பிரதிநிதிகள் இருப்பார்கள். இவர்கள் மூலமாக மேசியா ஆயிர வருட யுகத்தில் மனுக்குலத்தை ஆளுகை செய்து உயர்த்துவார். இப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டை தேவன் செய்திருக்கிறார். ஆபிரகாம்,

**R5785 : page 310**

ஈசாக்கு, யாக்கோபு மற்றும் மற்ற பழைய ஏற்பாட்டு கால பாத்திரகள் (Ancient worthies) சேர்ந்த இப்படிப்பட்ட ஒரு வகுப்பாரை தயார்படுத்தியிருந்தார். இவர்கள் மனித பூரணத்திற்கு எழுப்பப்படுவதற்கு பாத்திரவான்களாக கருதப்படுகின்றனர். அவர்களது உயிர்த்தெழுதலில் எந்தவித சுபாவ மாற்றத்தையும் பெறமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை. நமது கர்த்தர் யோர்தானில் ஜெநிப்பிக்கப்பட்டதை தவிர பெந்தெகொஸ்தே நாள் வரை யாரும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை. "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை." ஆகையால் அந்த பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள் தேவனை சந்தோஷப்படுத்துவதில் வெறும் சாட்சியங்களாக இருக்கிறார்கள். இவர்கள் தேவனிடத்திலும் நீதியினிடத்திலும் விசுவாசமாயிருந்தபடியினால், அந்த பழைய ஏற்பட்டு கால பாத்திரர்களில் சிலர், "கல்லெறியுண்டார்கள்; வாளால் அறுப்புண்டார்கள்; சிலர் பரீட்சை பார்க்கப்பட்டார்கள்; பட்டயத்தினால் வெட்டப்பட்டு மரித்தார்கள்; செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக் கொண்டு திரிந்து குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள். உலகம் அவர்களுக்கு பாத்திரமாயிருக்கவில்லை." (எபிரேயர் 11:37,38)

தேவனுடைய வாக்குத்தத்தங்களை அவர்கள் பெற்றிருந்தாலும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அவர்கள் அடையவில்லை. உதாரணமாக, ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தமாவது: "நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கு கொடுப்பேன்." தேவனுடைய வார்த்தை உண்மையாக நடந்தது என்பதை அறிய ஆபிரகாம் ஒரு உயிர்த்தெழுதலை பெற வேண்டும். அவர் அந்த இடத்தை பெற வேண்டும். கனம், மகிமை, சாகாமை கொடுக்கப்படும் என்ற வாக்குத்தத்தமோ, தெய்வீக சுபாவத்திலும் இயேசுவின் உடன் சுதந்தரராவதிலும் பங்கு கிடைக்கும் என்ற வாக்குத்தத்தமோ கொடுக்கப்படவில்லை. அப். 7:51; எபிரேயர் 11:8-10, 17,39,40ஐ பார்க்கவும்.

இது இயேசுவிலிருந்துதான் ஆரம்பித்தது. கிறிஸ்து, ஜீவனையும் அழியாமையையும் மனிதருக்கு அறிவித்ததோடல்லாமல் அவரோடு கூட இந்த ஜீவனை பெறக்கூடிய சலுகையையும் பெறமுடியும் என்று அறிவித்தார். "முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களால் நமக்கு உறுதிபண்ணப்பட்டது." "(எபிரேயர் 2:3) ஆனால் பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள், தேவனிடம் விசுவாசம் வைத்திருந்தார்கள். அவரது வாக்குத்தத்தத்தின் மேல் நம்பிக்கை வைத்து, அதன் நிறைவேறுதலுக்காக காத்திருந்தார்கள். தேவன் சாபத்தை நீக்கிப் போடுகிறார் என்ற வெறும் அறிவிப்பை மட்டும் பெற்றிருந்தார்கள். தேவனுடைய ஆசீர்வாதங்களை பெறுவதற்கு ஆபிரகாமின் சந்ததியே மகிமையின் வழியாக இருக்கும். "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்." ஆனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அவர்கள் அடையவில்லை என்று பரிசுத்த பவுல் நமக்கு கூறுகிறார். "அவர்கள் நம்மையல்லாமல் (சுவிசேஷ சபை) பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையான தொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்." (எபிரேயர் 11:40)

நமது ஆசீர்வாதங்களை நாம் பெறும் முன் பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள் அவர்களது ஆசீர்வாதங்களை அடைய முடியாது. மணவாட்டி மகிமையடைய வேண்டும். அதன் பிறகே பழைய ஏற்பாட்டுகால விசுவாசிகள் வந்து அவர்களது ஆசீர்வாதத்தை பெறக் கூடும். அதன் பிறகே ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். மேலும் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் அனைத்து பாத்திரர்களும் கிறிஸ்துவின் முதல் குமாரர்களாக இருப்பார்கள். பிதாக்களுக்கு பதிலாக குமாரர்கள் இருப்பார்கள். அவர்களை பூமியெங்கும் பிரபுக்களாக அவர் வைப்பார். (சங்.45:16) பூரண மனிதர்களாக உயிர்த்தெழுந்து, அவர்கள் தேவனுடைய பரிபூரண சாயலாக இருப்பார்கள். இந்த பழைய ஏற்பாட்டு கால பாத்திரர் ஒவ்வொருவரிலும் தேவன் மாம்சத்தில் வெளிப்படுவார். அந்த சமயத்தில் கிறிஸ்துவின் ராஜ்யத்தின் கீழ் அவர்கள் பிரபுக்களாக இருந்து பூமியை ஆளுகை செய்வார்கள்.

"நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்குகிறவர்களாக காண்பீர்கள்" (லூக்கா 13:28) என்று இயேசு சொன்னபோது இதை உறுதிப்படுத்தினார். அவர் தம்மைப்பற்றி, "இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது" என்று கூறினார். (யோவான் 14:19) நமது உயிர்த்தெழுதலில் நாம் ஆவிக்குரிய நிலைமையை பெறவில்லை என்றால் இனி எப்பொழுதும் அவரை பார்க்கவே முடியாது. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும், "இன்னும் உயிரோடு இருப்பவர்களும்" அவரது வெளிப்படுதலில், அவரைப்போல ஆக்கப்பட்டு, "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவார்கள்." நாம் மறுரூபமாக்கப்படும் நிமிடத்தில், நமது கர்த்தரை மாத்திரமல்ல, அனைத்து பரிசுத்த தூதர்களையும், இப்பொழுது நம்மால் காணக்கூடாமல் இருக்கக் கூடிய ஆவியின் சுபாவத்தில் இருக்கக்கூடிய அனைவரையும் நாம் பார்ப்போம். அவர்கள் மனுக்குலத்தைக் காணமுடியும். ஆனால் மனுக்குலம் அவர்களை காண முடியாது.

தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். முதலில் ஆதாம் மூலமாயும், இரண்டாவது இயேசு மூலமாயும், மூன்றாவது, பழைய ஏற்பாட்டு கால பாத்திரர் மூலமாயும் வெளிப்பட்டார். இந்த பழைய ஏற்பாட்டு கால பாத்திரர் மற்ற உலக ஜனங்களைக் காட்டிலும் மேன்மையான உயிர்த்தெழுதலுக்கு தகுதியானவர்களாக காணப்படுவார்கள்.

## நமது கர்த்தரின் புனிதத் தன்மையின் அழகு

போர்வீரர்கள் கேலி (ஏளனம்) செய்து, முள் முடியை நமது கர்த்தரின் தலையில் வைத்தார்கள். சிவப்பான மேலங்கியை அவருக்கு தரிப்பித்து நியாய ஸ்தலத்திற்கு கொண்டு வந்தார்கள். அவரைப் பார்த்த பிலாத்து, "இதோ, அந்த மனுஷன்!" (ஸ்ட்ராங்ஸ் கன்கார்டென்ஸ் பார்க்கவும்)" இதோ, அந்த முகம்! என்றான். நான் ஒரு புறஜாதியான், நான் உங்களுடைய இனம் அல்ல. ஆனால் பூமியிலே மிக மகிமையான யூதனை என்னிடம் தண்டனை கொடுக்கும்படி இங்கே அனுப்பியிருக்கிறீர்கள்! உள்ளான அழகு முகத்தில் பிரதிபலிக்காமல் உண்மையிலேயே அழகான குணலட்சணத்தை யாரும் பெற்றிருக்க முடியாது. ஒருவன் கெட்ட குணமுடையவனாயிருந்தால் அதை அவன் முகபாவத்திலிருந்து மறைக்க முடியாது. அவன் அன்பான குணமுடையவனாயிருந்தால், அது அவனது முகத்தில் தெரியும். நமது கர்த்தரைப் பற்றி நாம் என்ன நினைப்போம்! அவரது முகம் ஆச்சரியமான அழகை உடையதாக இருந்திருக்க வேண்டும்! அவர் தேவனுடைய ரூபமாகிய வசீகரமான பேச்சையும், ஆச்சரியமான அழகையும் உடையவராயிருந்ததினால், அவரைப் பார்க்க ஜனங்கள் கூட்டங் கூட்டமாக வந்ததில் ஆச்சரியமேதுமில்லை.

சங்கீதக்காரன் கேட்கிறதாவது; "மனுஷனை நீர் நினைப்பதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்? நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்." ஆனால் மனிதன் பாவத்திற்குள், விரோதத்திற்குள், இருளுக்குள் விழுந்தான். சாத்தானின் செல்வாக்கு கிரியை செய்து, சிருஷ்டிகராகிய தேவனுடைய சாயலிலிருந்து மனிதனை விழத் தள்ளியது. மனுக்குலத்தை பாவத்திலிருந்தும், அபூரணத்திலிருந்தும் திரும்பக் கொண்டு வருவது தேவனுடைய மகா நோக்கமாக இருக்கிறது. நீதியாயிருக்க விரும்புகிற அனைவரையும் தேவன் உயர்த்துவார்.

"தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதை காண்கிறோம்." (எபிரேயர் 2:9) மீட்பின் வேலை கல்வாரியில் தேவனுடைய பரந்த திட்டத்தின் அடிப்படை போடப்பட்டதை நாம் காண்கிறோம். மனித மீட்புக்கு இரட்சகரின் ஜீவனே விலைக்கிரயமாக இருக்க வேண்டும் என்பதை நாம் காண்கிறோம்." மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து (அபிஷேகம் பண்ணப்பட்டவர், மேசியா வகுப்பார்). பின்பு அவர் வருகையில் (அவரது பிரசன்னகாலத்தில் – கிரேக்கம்) அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1 கொரிந்தியர் 15:21–23) இயேசு கூறுகிறதாவது: "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்." இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடே கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள். (வெளி 20:6)

ஆகையால் "தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்" என்பது மனிதனாகிய இயேசு கிறிஸ்துவில், அவரது பரிபூரணத்தில் தெளிவாக காண்பிக்கப்பட்டது. ஆனால் இயேசு முப்பது வயதை அடைந்தபோது, தம்மை பலிக்காக யோவானிடம் யோர்தானில் ஒப்புக்கொடுத்த பொழுது, தேவன் விசேஷித்த விதமாக, குறிப்பாக, இயேசுவின் மாம்சத்தில் வெளிப்பட்டார். "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், புத்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது." அங்கே அவர் எந்தவித கறையும் இல்லாமல் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக ஒப்புக் கொடுத்தார். புறா அவர் மேல் இறங்கினதின் மூலம் தெய்வீக ஒப்புதல் குறிப்பிட்டு காண்பிக்கப்பட்டது. பரிசுத்த ஆவி புறாவைப் போல் இருக்கிறது என்று இது குறிப்பிடவில்லை. அவர் மேசியா என்பதற்கான ஒரு வெளியரங்கமான அடையாளத்தை யோவானுக்கு தேவன் கொடுத்தார். இதனிமித்தம் இப்படியாக அவர் சொல்லக் கூடும்: "ஆவி பரலோகத்திலிருந்து ஒரு புறாவைப் போல இறங்கி அவர் மேல் அமர்ந்ததை நான் பார்த்தேன்."

இயேசுவின் ஞானஸ்நானத்திற்கு பிறகு தேவன் அவரிடம் ஒரு விசேஷித்த முறையில் தொடர்பு கொண்டார். அப்போஸ்தலர் யோவான்

**R5785 : page 311**

சபையைப்பற்றி கூறும்போது, தேவன் நம்மிலும், நாம் தேவனிலும் நிலைத்திருக்கிறோம் என்று சொன்னார். (1 யோவான் 4:16) பிதாவானவர் இயேசுவை தமது வாசஸ்தலமாகக் கொண்டு, தமது தெய்வீக திட்டத்தை அவர் அறியும்படி செய்தார். நமது கர்த்தர் கூறியதாவது: "கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்; தரித்திரருக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்கு பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொருங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார்." (லூக்கா 4:16–21; ஏசாயா 61:1–3)

## வனாந்தரத்தில் நமது கர்த்தரின் சோதனை

இயேசு பரிசுத்த ஆவியை பெற்ற நேரத்திலிருந்து, பரத்துக்குரிய காரியங்கள் அவருக்கு அறியப்படும்படி செய்யப்பட்டது என்று நாம் வாசிக்கிறோம். ஏனெனில் அப்போஸ்தலர், "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்...

அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" என்று கூறுகிறார். இயேசு பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலை பெற்றபொழுது ஆவிக்குரிய பகுத்துணருதலை பெற்றுக் கொண்டார். பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட நிழல்கள் எல்லாம் தம்மைப்பற்றி குறிப்பிட்டது என்பதைக் கண்டார்.

இவைகளை அவர் பார்த்தபோது, அவர் வனாந்தரத்தில் இருந்ததை நாம் மனதில் நினைக்கிறோம். முழு வேதாகமத்தையும் அவர் தமது மனதில் வைத்திருந்தார். சிறு பிராயத்திலிருந்தே அவர் ஜெப ஆலய கூட்டங்களில் கலந்து கொள்வதை வழக்கமாக வைத்திருந்தார். அவரது பரிபூரண சிந்தையில் வேதவாக்கியங்கள் அனைத்தும் முற்றிலுமாக பதிந்திருந்தது. வேதத்திலிருந்து எந்த வசனத்தையும் அவரால் குறிப்பிட முடிந்தது. சாத்தான் வேத வசனத்தை குறிப்பிடும்போது இயேசு புரிந்து கொண்டார்.

இயேசு நாற்பது நாள் உபவாசம் இருந்து முடியும்போது, அவர் பலவீனமானவராயிருந்தது, அவரை சோதிப்பதற்கு சாத்தானுக்கு ஏற்ற நேரமாக இருந்தது. அவரது தியாக பலியின் மரணத்துடன் இணைந்த அனைத்து அவமானம், இழிவு போன்றவற்றைப் பற்றிய எண்ணம் அவருக்கு முன் இருக்கும்போது, அவரை பயப்பட வைப்பதற்கு அதுவே போதுமானதாக இருக்கும். அவர் ஒரு தெய்வ நிந்தனையாளராக, தேவனுக்கு எதிரானவராக எண்ணப்படுவதற்கு, சாத்தானுக்கு அது மிகவும் சரியான சந்தர்ப்பமாக இருந்தது. மேலும் பிதாவானவர் அவர் சோதிக்கப்படுவதற்கு அனுமதித்தார். இந்த குறிப்பிட்ட நேரத்தில் எதிராளியானவன் அவரை சோதிப்பதற்கு அனுமதித்தார்.

சாத்தானே நமது கர்த்தரின் மனதை நோக்கி கூறினதாவது: நான் உன்னை நன்றாக அறிவேன். நாம் நீண்ட நாட்கள் பரிச்சயம் உடையவர்களாக இருக்கிறோம். நீ எந்த குறிக்கோளுக்காக வந்திருக்கிறாய் என்பதை நான் அறிவேன். நீ ஞானஸ்நானம் பெற்றபோது உன் மேல் வந்த வல்லமையை நீ உணரவில்லை என்பதை நான் அறிவேன். தேவனுடைய வல்லமை எப்படி உன்மேல் வந்தது என்பதை நான் கவனித்தேன். இந்த கற்களை அப்பமாகு என்று கட்டளை இட்டால் மட்டும் போதும். பெரிய வேலைகளை உன்னால் செய்யமுடியும் என்று நான் உணர்கிறேன். இந்த காரியத்தில் நானும் உன்னோடு சேர்ந்து கொள்ள விரும்புகிறேன். முதலில் சாப்பிடுவதற்கு உனக்கு ஏதாவது வேண்டும்.

இயேசு சாத்தானை அறிவார், அவன் லுசிபர் என்பதையும், தேவராஜ்யத்திற்கு விரோதமாக கலகம் செய்ததினால் இந்த கிரகத்தில் (Planet) அவன் சிறையிடப்பட்டான் என்பதையும் அறிவார். சாத்தான் இயேசுவிடம் தோன்றியபோது, அவன் தன்னை ஒளியின் தூதனாக காண்பித்துக் கொள்ளவும். தேவன் பக்கம் இருக்க விரும்புவதாகவும், தற்போது தேவனோடு ஒத்துழைக்க விரும்புவதாகவும், காண்பித்துக் கொள்ள முயற்சித்தான் என்று நாம் நிச்சயிக்கிறோம். ஆனால் அவரது வல்லமை தமது ஜீவனை தக்க வைத்துக் கொள்ள கொடுக்கப்படவில்லை என்பதையும், சோதனைக்கு இடம் கொடுக்கமாட்டார் என்பதையும் இயேசு அறிவார்.

ஆகையால் அடுத்து அவரை உயர்ந்த மலைக்கு சாத்தான் கொண்டு போனான் – இது அவர்களது சிந்தையின் ஆவியில்–அவன் எப்படிப்பட்டவன் என்பதை காண்பித்தான். அவன் "இந்த உலகத்தின் அதிபதி" என்பதையும் மற்றும் அனைத்து ராஜ்யங்களையும் காண்பித்தான். மேலும் அவன் கூறியதாவது; நீ பார், உனக்கு நான் உதவி செய்யக் கூடிய வல்லமையை உடையவனாயிருக்கிறேன். இப்படிப்பட்ட உதவியில்லாமல் உன்னால் கொடுக்க முடியுமா? நான் உன் மீது பரிதாபம் கொள்கிறேன். நீ மனுக்குலத்தை பாதுகாத்து, அவர்கள் அனைவரையும் மரணத்திலிருந்து இரட்சிப்பாய், தேவனுடைய திட்டத்தின்படி நீ பாடுபடுவதற்கு பதிலாக, நாம் இணைந்து கிரியை செய்வோம். நீ பாடுபட வேண்டிய அவசியமில்லை. ஆனால் முதலில் நீ என்னை அங்கீகரிக்க வேண்டும். அந்த வழியில்தான் நான் ஆரம்பித்தேன். எப்படிப்பட்ட ராஜ்யத்தை நான் ஸ்தாபிப்பேன் என்பதை காண்பிக்க விரும்பினேன். நான் சொன்னதாவது;" நான் வானத்துக்கு ஏறுவேன்; தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன்; நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன்." நான் எனக்கென்று ஒரு சாம்ராஜ்யத்தை உடையவனாயிருப்பேன். நீ உள்ளே வந்து என்னுடன் பகிர்ந்து கொள்ளும்படி உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன். நீ கேட்டால் இந்த மகிமையெல்லாம் உனக்கு கொடுப்பேன். இந்த உலகின் அதிபதியாக இருக்கும்படி திட்டமிட்டுள்ளேன். எல்லாம் என் கைக்குள் இருப்பதை நீ பார்க்கவில்லையா?

ஆனால் இந்த சோதனைகளில் இயேசு வெற்றிக்கொண்டார். இனி அவரை சோதிப்பது பிரயோஜனமில்லை என்று சாத்தான் நினைக்கிற அளவுக்கு வெற்றி முழுமையாக இருந்தது. இயேசு பசியாயிருக்கும்போதே அவரை அசைக்க முடியவில்லை என்றால், இனி அவரை சோதிப்பதில் எந்த பிரயோஜனமும் இருக்காது என்று சாத்தான் நினைத்தான். ஆகையால் அதன்பிறகு அவன் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று வேதம் கூறுகிறது.

## அவதாரக் கொள்கை வேதத்திற்கு இசைவானதல்ல

இதற்கு பிறகு இயேசு நன்மை செய்யவும், வியாதியஸ்தர்களை சொஸ்தம் பண்ணவும் ஜனங்களுக்கு போதிக்கவும் சென்றார். எல்லாம் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இருந்தது. பிதாவானவர் மாம்சீக சரீரத்தில் அவதாரம் எடுத்திருந்தால், அவரால் அவருடைய சித்தத்தை இவ்வளவு சிறப்பாக செய்திருக்க முடியாது. ஆனால் இயேசு அவதாரம் எடுக்கவில்லை. நமது கர்த்தரின் அவதாரக் கொள்கை வேத ஆராய்ச்சி இல்லாத இருண்ட காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கொள்கையாகும். ஏனெனில் அவர் தம்மைத் தாமே தாழ்த்தி மனிதனாகி, "மரணபரியந்தமும், அதாவது சிலுவை மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவரானார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழுங்கால் யாவும் முடங்கும் படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லாவற்றிற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்.'' (பிலிப்பியர் 2:8-11)

---

See more Books & Articles at www.foodfornewcreature.com